# திருப்பத்தூர் நகராட்சி

2019 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 – ம் நாள் வியாழக்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம்
திருப்பத்தூர்
நாள் 07.03.2019

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் நகராட்சி.

**பொருட்கள்**

**38)** இந்நகராட்சி பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் கோரியுள்ளதன்படி, அடிப்படை வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் ஆகியவற்றை மேற்கொள்ள அதற்கான தோராய மதிப்பீட்டு செலவினங்களுக்கு திருப்பத்தூர் நகராட்சி பொது நிதி மற்றும் குடிநீர் & வடிகால் நிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கோடைக்கால முன் எச்சரிக்கை பணிக்காக நகராட்சி பகுதியில் வார்டு எண்.1 முதல் 36 வார்டு வரை உள்ள சிறு மினி பவர் பம்பு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 5.00 |
| 2 | கோடைக்கால முன் எச்சரிக்கை பணிக்காக அம்பலூர், தெண்பெண்ணை கூட்டு குடிநீர் தலைமை நீரேற்று நிலையம் மின்மோட்டார்கள் மற்றும் மெயின் பைப் லைன் பராமரிப்பு பணி செய்தல் | 4.00 |
| 3 | கோடைக்கால முன் எச்சரிக்கை பணிக்காக திருப்பத்தூர் நகராட்சி பகுதி வார்டு 1 முதல் 36 வரை உள்ள பகிர்மான பைப் லைன் உடைப்பு, அடைப்பு, லீக்கேஜ் பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பணி. | 1.50 |
| 4 | வாணியம்பாடி சாலையில் உள்ள சின்ன டேங்க் தரைமட்ட நீர்தேக்க தொட்டியில் உள்ள மின் மோட்டார் பராமரிப்பு பணி. | 1.35 |
| 5 | தெண்பெண்ணை தலைமை நீரேற்று பைப் லைன் உடைப்பு, அடைப்பு, லீக்கேஜ் பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பணி. | 1.65 |
| 6 | வார்டு எண் 20 கச்சேரி தெரு மற்றும் சாமி தெருவில் இணைப்பு சிறுபாலம் அமைத்தல். | 1.00 |
| 7 | கௌதமபேட்டை பைப் லைன் அமைத்தல் பணி | 0.85 |
| 8 | புதுப்பேட்டை சாலை ஜி.பி மஹால் அருகில் சிறு மினி பவர் பம்ப் மின் மோட்டார் புதியதாக மாற்றி அமைத்தல். | 0.65 |
| 9 | கௌதமபேட்டை சிறு மினி பவர்பம்ப் பழுது பார்த்தல் பணி மற்றும் சாமியார் கொட்டாய் இரயில்வே குடியிருப்பு பகுதி அருகில் ஆழ்துளை கிணறு பராமரிப்பு பணி. | 0.30 |

| | | |
|---|---|---|
| 10 | வேலன் நகர் மின் மோட்டார் பழுது பார்த்தல் பணி குள்ளாச்சாரி வட்டம் மின் மோட்டார் பழுது பார்த்தல் பணி, நேதாஜி தெரு சிறு மின் பவர் பம்ப் பழுது பார்த்தல் பணி. | 0.65 |
| 11 | பாரதி சாலை, மருத்துவர் நகர் மற்றும் புதூர் மாரியம்மன் கோயில் தெரு வார்டு எண்.22 சிறு மினி பவர் பம்ப் பராமரிப்பு பணி | 1.10 |
| 12 | வார்டு எண்.35 சந்திரன் நகர் வார்டு எண்.36 சிவசக்தி நகர் சிறு மின் பவர் பம்பு பராமரிப்பு பணி. | 0.85 |
| 13 | வார்டு எண்.08 பொன்னியம்மன் கோயில் தெரு (புதிய பேருந்து நிலையம் சாலை) சிறுபாலம் அமைத்தல் பணி. | 3.15 |
| 14 | வார்டு எண்.3 மற்றும் 4 பகுதிகளில் சிறு பாலம் அமைத்தல் | 2.20 |
| 15 | வார்டு எண்.23 அப்துல் மாலிக் தெருவில் சிறு பாலம் அமைத்தல் பணி. | 4.00 |
| 16 | வார்டு எண்.29 அண்ணா நகர் தெற்கு பக்கம் மழைநீர் கால்வாய் மற்றும் சிறு பாலம் அமைத்தல் பணிகள். | 6.00 |

**அலுவலக குறிப்பு**

மாவட்ட ஆட்சித் தலைவர் வேலூர் ஆய்வுக்கூட்டத்தில் கோடை காலங்களில் குடிநீர் பற்றாக்குறையினை சரிசெய்ய வழங்கிய அறிவுரைகளின்படி, மேற்படி பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினங்களுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.248/2019/இ1)

**39)** திருப்பத்தூர் நகராட்சி 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற திட்டப்பணிகள் விவரங்களை தினத்தந்தி நாளிதழில் தமிழக அரசின் இரண்டாண்டு சாதனை சிறப்பு மலரில் விளம்பரம் செய்து அதற்கான விளம்பர கட்டணங்கள் வழங்க கோரி பட்டியல் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தமிழக அரசின் இரண்டாண்டு சாதனை சிறப்பு மலரில் திருப்பத்தூர் நகராட்சி வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கான விவரங்கள் விளம்பரம் செய்யப்பட்டதற்கான செலவு பட்டியல் தொகை ரூ.13,860/-ஐ நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மாவட்ட ஆட்சியரின் அனுமதியுடன் அனைத்து நகராட்சிகளும் வெளியிட்டுள்ள மலருக்கு தொகை வழங்க அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2324/2018/இ1)

**40)** நகராட்சி வடக்கு முத்தப்பர்தெரு வார்டு எண்.25-ல் மின் விசை பம்பு மற்றும் தளவாட பொருட்கள் புதுப்பிக்க வேண்டியுள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.65000/-க்கும் பணியை செய்யவும் மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. இப்பணிக்கு அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததார்ரின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | எம்.புஷ்பநாதன் | மதிப்பீட்டு விலை விகிதமே |
| 2 | கே.மூர்த்தி | 1.02% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3 | கே.வி.இளங்கோவன் | 2.64% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1) பணியை செய்யவும் செலவினம் ரூ.65000/-க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் திரு.எம்.புஷ்பநாதன் அவர்களின் விலைப்புள்ளி மதிப்பீட்டு விகிதத்திலேயே உள்ளதாலும், பிற விலைப்புள்ளிகளை காட்டிலும் குறைவாக உள்ளதாலும் மன்றம் அனுமதிக்கலாம்.

**41)** நாடாளுமன்றத் தேர்தல் 2019 நடைபெறுவதை முன்னிட்டு நகராட்சி பகுதியில் உள்ள 71 வாக்கு சாவடிகள் அமைந்துள்ள பள்ளிகளில், கட்டிடக்ளில் அத்தியாவசிய பணியான குடிநீர்வசதிகள் கழிவறைகள் பழுதாகியுள்ள பகுதிகளை பராமரிப்பு பணி செய்யவும், சில மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் வேண்டியுள்ளது. இப்பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்த்தாரர்களிடம் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது அதன் விவரம் வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததார்ரின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | எம்.புஷ்பநாதன் | 0.00% மதிப்பீட்டு விகிதமே |
| 2 | கே.மூர்த்தி | 1.00% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3 | கே.வி.இளங்கோவன் | 2.00% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1) பணி செய்யவும் செலவினம் ரூ.2.25-க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்த்தாரர் திரு.எம்.புஷ்பநாதன் அவர்களின் விலைப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதம் மற்ற விலைப்புள்ளிகளைவிட குறைவாகவும் ஏற்புடையதாகவும் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.